**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 246 of 2024

Deposition of P.W. 2

Name of the Witness: திரு.துரைசாமி

Date : 25.06.2025

**2, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சி சொல்ல சம்மன் வரவில்லை. அமுதவள்ளி கூப்பிட்டதால் வந்தேன். நான் Old SSLC படித்துள்ளேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பழனிகவுண்டருக்கு பூர்வீகம் நாமக்கமல் மாவட்டம் தற்போது தட்டான்குட்டை புதூர். அவருக்கு பூர்வீக சொத்துக்கள் அங்கு எதுவும் இல்லை என்றாலும், அவர் பிழைப்பதற்காக தான் இங்கு வந்தார் என்றால் சரியல்ல. இரண்டு ஏக்கர் நிலத்தை விற்று விட்டு தான் இங்கு வந்தார். இரண்டு ஏக்கர் நிலத்தின் விவரங்கள் எனக்கு தெரியாது. அந்த பூர்வீக சொத்து எனக்கும், பழனிகவுண்டருக்கும் ஒரே வரப்பு.

2) தாவா 1ம் இன சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. இந்த சொத்து பழனிகவுண்டர் சுயமாக வாங்கி அவர் பெயரில் கிரைய பத்திரம் உள்ளது என்றால் சரிதான். அதன் அளவு 1 ஏக்கர் 66 சென்ட். அதற்கு தான் வழக்கு போடப்பட்டுள்ளது.

3) தாவா 2ம் இன சொத்து 1, 2 பிரதிவாதிகள் பேரில் 1988ல் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அவர்கள் பெயரில் பட்டா

கூட்டாக உள்ளது. 1ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் சொத்துக்களை விற்றுள்ளார் என்றால் சேர்ந்து தான் விற்றுள்ளார். 1ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் சொத்துக்களை விற்றுள்ளார் என்றால் சரியல்ல. மூர்த்தி அவருக்கு பாகமாக வந்த சொத்துக்களை நிறைய பேர்களுக்கு கிரையம் செய்துள்ளார் என்றால், பாகமே ஏற்படவில்லை. சேர்ந்து தான் சொத்துக்களை விற்றுள்ளார்கள். பழனிகவுண்டர் சுமார் 18 வருடங்களுக்கு முன்பாக இறந்திருப்பார்.

4) வாதிக்கு நிறைய நகைகள் போட்டு, சீர்வரிசை செய்து திருமணம் செய்து வைத்தார் என்றால் திருமணம் செய்து வைத்தார். பெரிதாக நகைகள் எதுவும் போடவில்லை. வாதி திருமணம் ஆனதிலிருந்து அவரரு கணவர் வீட்டில் வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அவருக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் தனியாக விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. பாகமே ஏற்படவில்லை. எல்லோரும் ஒன்றாக தான் அனுபவித்து வருகிறார். 1ம் பிரதிவாதி தற்போது அவருடைய மாமியார் வீட்டில் குடியிருக்கிறார். அவருக்கு சொந்தமாக வீடு எதுவும் இல்லை. 1ம் பிரதிவாதி அவருக்கு பாகபிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் விற்று விட்டு அவரது மாமியார் வீட்டிற்கே சென்று விட்டார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி அவருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் வீடு கட்டி குடியிருக்கிறார் என்றால், பாகமே ஏற்படவில்லை. ஆனால் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்.

5) பழனிகவுண்டர் உயிருடன் இருக்கும் போதே 1983ல் 1, 2 பிரதிவாதிகளுக்கு பாகம் பிரித்து கொடுத்து விட்டார் என்றாலும், அதன் அடிப்படையில் அவர் அவர்கள் சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவர் அவர்கள் பெயரில் பட்டா தனியாக உள்ளது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு பாகமாக வந்த சொத்தில் சர்வே எண் 2/1ல் ஒரு ஏக்கர் 44 சென்டை விற்றுவிட்டார் என்றால் பாகமே ஏற்படவில்லை. மூர்த்தி குடும்பத்தில் தனியாக பாகபிரிவினை ஏற்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு தெரிந்து பிரித்து கொடுத்ததே இல்லை. 2ம் பிரதிவாதி சொத்தை 7 பிரதிவாதிக்கு விற்று விட்டதாக கேள்விபட்டேன். 7ம் பிரதிவாதி தான் சொத்தில் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல, நிலம் சும்மா தான் இருக்கிறது. 7ம் பிரதிவாதி விவசாயம் செய்து வரும் விவரம் எனக்கு நன்றாக தெரியும் என்றாலும், அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) 1ம் பிரதிவாதியின் மகளை தான் என்னுடைய மருமகளின் அண்ணனுக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். ஏற்கனவே பாகம் ஏற்பட்ட சொத்தை 1ம் பிரதிவாதியின் தூண்டுதல் பேரில் வாதி வழக்கு போட்டுள்ளார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சொத்தை விற்று விட்டு ஏதேனும் பாகம் கிடைக்குமா என்பதற்காக வாதி மூலமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி,

*1ம் பிரதிவாதி தூண்டுதல் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.*